(உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், பேரவைத் தலைவர் இருக்கைக்கு அருகில் காவல் துறை கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தை, கிழித்து எறிந்தார்.)

முற்பகல் 11-45

4. அரசினர் தீர்மானம்

(அ) திரு. ஜெ. அன்பழகன் கூட்டத் தொடர் முழுமைக்கும் அவை நடவடிக்கைகளினின்று நீக்கி வைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவரை அவையிலிருந்து வெளியேற்றுங்கள். திரு. ஜெ. அன்பழகன் அவர்கள் எனக்கு நேரே வந்து மானியக் கோரிக்கையைக் கிழித்துப் போட்டு, சட்டமன்றத்தினுடைய மரபுக்கும், கண்ணியத்திற்கும், விதிமுறைகளுக்கும் மாறாக நடந்த காரணத்தால், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று நானே கருதுகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அலுவல்களை நடைபெறாது இடைமறித்தும் பேரவையின் விதிகளை, தொடர்ந்து முறையற்று மீறுவதாலும் சட்டமன்றப் பேரவையின் விதி 121 உள் விதி 2-ன்கீழ் இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் திரு. ஜெ. அன்பழகன் அவையிலே கண்ணியக் குறைவாகப் பேசி, அமங்கலமாகப் பேசி, அவையினுடைய மரபை மீறிப் பேரவைத் தலைவர் அவர்களுடைய இருக்கைக்கே வந்து வன்முறையைத் தூண்டுவது போல அங்கே புத்தகத்தைக் கிழித்து வீசி இருக்கிறார். இப்படிப்பட்ட நடவடிக்கையில் ஈடுபட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்களை இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் அவையிலிருந்து நீக்கி வைக்க வேண்டும் என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

திரு. ஜெ. அன்பழகன் இந்தக் கூட்டத் தொடரில் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைக்கப்படுகிறார். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன் அவையிலிருந்து உடனே வெளியேற வேண்டும். அவர் வெளியேறாவிட்டால் காவலர்கள் உடனே அவரை வெளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(அவைக் காவலர்கள் தி.மு.க. உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகனை வெளியேற்றினர்.)

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்த மன்றத்தில் தன் கருத்துகளை எடுத்துச் சொல்வதற்கு நேரம் இல்லை என்ற காரணத்தால் அவருடைய அதிருப்தியைத் தெரிவிப்பது பாராளுமன்ற முறையிலே ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், பெரும்பாலான உறுப்பினர்களுக்கு அவர்கள் விரும்புகிற நேரம் கிடைக்கவில்லை. முன்வரிசைத் தலைவர்களைக்கூட நான் உட்கார வைத்திருக்கிறேன். அவர்களுடைய பேச்சை, அரையுங்குறையுமாக, அவர்கள் பேசி முடிப்பதற்கு முன்னால், நான் உட்கார வைத்திருக்கிறேன். திரு. ஜி.கே. மணி அவர்களைப் பலமுறை உட்கார வைத்திருக்கிறேன். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறபோது நான் தலையிட்டு உட்கார வைத்திருக்கிறேன். ஏன் உங்களையே; உங்களுடைய பேச்சு முழுமையாக வருவதற்கு முன்னால் நான் உட்கார வைத்திருக்கிறேன், நேரத்தைக் கருதி. நேரத்தைக் கடைப்பிடித்து, அவையை நடத்த வேண்டிய பொறுப்பு என்னைச் சேர்ந்தது. அந்த வகையிலே அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நேரத்தைக் கொடுத்தேன். உரிய நேரத்தைக் கொடுத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்ன நேரத்தையும்கூடக் கழித்துக்கொண்டு அவர்களுக்கு எவ்வளவு நேரம் நியாயமாகக் கொடுக்க வேண்டுமோ கொடுத்தேன். ஆனால் அந்தநேரத்திலே விதிகளுக்கு மாறாக, கண்ணியத்திற்கு மாறாக, ஆபாசமாக சட்டமன்றத்தைப் பயன்படுத்திப் பேசுவது என்பது முறையற்றது. இப்படிப்பட்ட பேச்சைப் பேசுவதற்குச் சட்டமன்றம் இடமளிக்காது. அது ஒரு பக்கம். ஆனால் அதற்கு நேரம் இல்லை என்கிற காரணத்திற்காக நேரே எனக்கு முன்னாலே வந்து மானியக் கோரிக்கைப் புத்தகங்களைக் கிழித்துப்போடுவது என்பது, இது அவையினுடைய மரபுகளைக் கடைப்பிடிப்பது அல்ல. இதே நிலையை ஒவ்வொரு உறுப்பினரும் பின்பற்ற ஆரம்பித்தால் அவையை நடத்த முடியாது. ஆகவே தாங்கள் என்னுடைய தீர்ப்புக்குக் கட்டுப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2003 ஏப்ரல் 8]

திரு. துரைமுருகன்: தங்களுடைய தீர்ப்பைப் பற்றி நான் சொல்லவில்லை. இந்த அவைக்கு இருக்கிற நேரத்தை எல்லோருக்கும் பகிர்ந்தளித்து அவையை நடத்துவது சபாநாயகருடைய உரிமை. அதிலே நான் குறுக்கிடவில்லை. அதேபோன்று தனக்கு நேரம் அதிகம் வேண்டுமென்று சபாநாயகரிடத்தில் கெஞ்சுவது, போராடுவது, கொஞ்சம் வேகமாகக்கூடப் பேசுவது மரபு. பாராளுமன்றத்திலேகூட அப்படிப்பட்ட நிலைகள் இருக்கின்றன. பாராளுமன்றத்தில்கூடத் தங்களுடைய உரிமைகளை மறுக்கின்றபோது well என்று சொல்கிற இடத்திற்கு இப்படிப்பட்ட உறுப்பினர்கள் உணர்ச்சிவயப்பட்டு வருவது உண்டு. இங்கே அன்பழகன் அவர்கள் தனக்கு நேரம் கிடைக்கவில்லை என்பதைத் தங்கள் அருகிலே வந்து தெரிவித்து, புத்தகத்தைக் கிழித்துப் போட்டார் என்பது உண்மை. ஆனால் ஆபாசமாக நடந்துகொண்டார், வார்த்தைகளைப் பிரயோகித்தார் என்பதை ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசிய பேச்சுகள் சட்டமன்றத்தில் பேச வேண்டிய பேச்சுகளா என்பதைத் தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும், இது முறையற்றது.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்குத் தாங்கள் இந்த அவையில் சரியான ஒரு மதிப்பைத் தராத காரணத்தால் எங்கள் அதிருப்தியை வெளிப்படுத்துகிற வகையில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன் அவர்கள் இப்படிப்பேசுவது எனக்கு மிகுந்த வியப்பாக இருக்கிறது. எந்த நேரத்தில் நீங்கள் பேச எழுந்தாலும், உங்களைப் பேச அனுமதித்திருக்கிறேன். கருத்தைச் சொல்ல அனுமதித்திருக்கிறேன். இவ்வளவுக்குப் பிறகும் நீங்கள், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு மதிப்பைத் தரவில்லை என்று பேசுவது நியாயத்திற்கு விரோதமானது.

திரு. துரைமுருகன்: ஒன்றைக் கேட்கிறேன், தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினரைத் தண்டிக்கலாம், இன்றைக்கு வராமல் இருக்கலாம். ஏற்கெனவே ஓர் உறுப்பினரைத் தொடர் கூட்டம் வரை வர வேண்டாம் என்கிறீர்கள். இன்னோர் உறுப்பினரை நீங்களாகவே இந்தத் தொடர் கூட்டம் முழுவதும் வர வேண்டாம் என்று சொல்வது என்ன ஜனநாயக முறை என்றுதான் நான் கேட்கிறேன். நீங்கள்தான் எங்களுடைய தலைவர்; நீங்கள்தான் எங்களுடைய உரிமையைக் காக்க வேண்டியவர்கள்; இந்த அவையிலே உங்களை நம்பித்தான் நாங்கள்

[திரு. துரைமுருகன்] [2003 ஏப்ரல் 8

உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். எங்களுக்கு அரணாகவும், எங்களுக்குப் பாதுகாப்பாகவும் எதிர்க் கட்சிகளுடைய வாயாகவும், கண்ணாகவும் இருக்க வேண்டியவர்கள்; நீங்கள் இப்படிச் செய்யலாமா என்பதுதான் என்னுடைய வினா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் நடந்து கொண்ட விதம் அவையினுடைய கண்ணியத்திற்கு மதிப்பளிக்கக்கூடிய விதம் அல்ல. தாங்கள் இப்போது பேசுவதுகூட உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதுபோலக் காட்டுகிறீர்களே தவிர, உங்களுக்கு வரக்கூடிய கோபமோ உண்மையான கோபம் அல்ல என்பது எனக்கு நன்றாகத் தெரியும். உங்களோடு நீண்ட காலமாகப் பழகியவன்.

திரு. துரைமுருகன்: என்னுடைய கோபத்தை இந்த அவை அறியும். ஆனால் இருக்கிற இடத்திற்கு, தகுதிக்கு, தலைமைப் பொறுப்புக்குத் தக்கபடி நான் நடந்து காட்டுகிறேன். அது தங்களுக்கு நடிப்பாக இருந்தால் நான் என்ன செய்ய முடியும். நடிக்க வேண்டுமானால், அதற்கும் நான் தயார்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

முற்பகல் 11-50

3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 21 - உள் துறை - காவல்—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண் 22 - உள்துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியாவது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளியேற வேண்டுமென்ற ஒரு குறிக்கோளோடு வந்திருக்கிறார்கள் என்பது இதிலேயிருந்து தெரிகிறது. ஏனென்றால், இதய தெய்வம் புரட்சித்